# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No. 291 of 2018

**பெயர்** : திருமதி. நாகலட்சுமி
**தந்தை பெயர்** : திரு. காசிநாதன்
**பி.வா.த.சா** :

1969**ம் ஆண்டு** 14**வது சட்டத்தின் படி** 12**வது பிரிவின் கீழ் 17.02.2026 அன்று திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B., முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**, **கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது**.

வா.த.சா. 2 - மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி 1 -3 தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

பிரதிவாதி 1 -3 தரப்பில் குறுக்கு விசாரணை.

எங்களுக்கு பாத்தியப்பட்ட வீட்டை காலி செய்யுமாறு பிரதிவாதிகள் தொந்தரவு செய்தார்கள். அதனால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிப்பதற்கு என்னிடம் என்ன ஆவணம் உள்ளது என்றால் எனது தாய்மாமன் குப்புராஜ் எழுதிவைத்த உயில் உள்ளது. குப்புராஜ்க்கு வழக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனது ஆயா மற்றும் குப்புராஜின் தாயார் கிருஷ்ணம்மாள் குப்புராஜிற்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார்.

மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணப்படி எனது ஆயாவிற்கு வழக்கு சொத்தில் உள்ள அவரது பாகத்தை மட்டும் எழுதிவைத்தார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் வா.த.சா. ஆ.2 படி எனது ஆயா வழக்கு சொத்து அனைத்தும் அவரது சுய சம்பாத்தியம் என்ற முறையில் வழக்கு சொத்து அனைத்தையும் குப்புராஜ்ற்கு எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. மீதம் உள்ள பாகத்தை ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் எழுத்து பூர்வமாக எனது தாயார் பாகமாக கொடுத்து விட்டார். அந்த ஆவணம் என் வசம் உள்ளது. அந்த ஆவணம் வழக்கில் தாக்கல்

M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.02.17 13:55:34 -0500

செய்யவில்லை. அந்த ஆவணத்தை திருடிச்சென்றுவிட்டார்கள். நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் 1 முதல் 3 எனது தாய்மாமன் குப்புராஜ் மனைவி மற்றும் குழந்தைகள் ஆவார்கள். வா.த.சா.ஆ. 10 மற்றும் 11 நான் கொடுத்த புகார் தான். தற்போது நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் மற்றும் உயில் பற்றிய விவரங்கள் சொத்து எவ்வாறு வந்தது போன்ற விவரங்கள் எதுவும் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது தாய்மாமன் இறந்து 3 மாதங்கள் கழித்து உயில் பற்றி எனக்கு தெரிய வந்தது. 3 மாதம் கழித்து பீரோ திறந்து பார்த்த போது உயில் எனது கண்களில் பட்டது. உயில் ஆவணத்தில் உள்ள சாட்சிகள் யாரும் உயிருடன் இல்லை. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுடளள உயில் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது மாமா கடலுர் துறைமுகம் பகுதியில் குடியிருந்தார் . கடலூர் துறைமுகம் பகுதியில் குடியிருந்தவர் பண்ருட்டி க்கு சென்று உயில் எழுதி வேண்டிய அவசியம் இல்லை என்றால் அது அவரது விருப்பம்.

1 முதல் 3 பிரதிவாதிகள் தான் இறந்து போன குப்புராஜிற்கு சட்டப்பூர்வ வாரிசுகள் என்றால் சரிதான். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சொத்தை அபகரிக்க போலி உயில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குப்புராஜிற்கு சட்டப்பூர்வ வாரிசுகள் இருந்த நிலையில் அவர் எங்களுக்கு உயில் எழுதி வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட வேண்டியது இல்லை என்பதால் இந்த உயில் போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.02.17 13:55:44 -0500